தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023.07.06 |

**நாணயக்கொள்கை மீளாய்வு : இல. 05 - 2023 யூலை**

**இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை மேலும் குறைக்கின்றது**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2023 யூலை 05ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 11.00 சதவீதத்திற்கும் 12.00 சதவீதத்திற்கும் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. எதிர்பார்த்ததிலும் பார்க்க விரைவான பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன உள்ளடங்கலாக தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளின் உன்னிப்பான பகுப்பாய்வொன்றினைத் தொடர்ந்து சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டு பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதனை இயலுமைப்படுத்துவதனையும் நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதிநிலைப்படுத்தும் வேளையில் நிதியியல் சந்தைகளிலுள்ள அழுத்தங்களைத் தளர்த்துவதனையும் நோக்காகக் கொண்டது. 200 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட இக்குறைப்பு மற்றும் அரச பிணையங்கள் மீதான இடர்நேர்வு மிகையில் அண்மையில் பதிவுசெய்யப்பட்டவாறான குறிப்பிடத்தக்க குறைவுடன் இணைந்து 2023 யூன் முற்பகுதியில் 250 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு என்பவற்றுடன் சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக, கடன்வழங்கல் வீதங்கள் போதியளவாலும் விரைவாகவும் கீழ்நோக்கிச் சீராக்கப்படுமென சபை எதிர்பார்க்கின்றது. ஆதலால், மத்திய வங்கியின் மூலமான நாணயக் கொள்கையின் இக்குறிப்பிடத்தக்க தளர்த்தலின் நன்மைகளைத் தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களிற்கும் ஊடுகடத்துவதுடன் அதன்மூலம் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் மீளெழுச்சியடைவதற்கு ஆதரவளிக்குமாறு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை வலியுறுத்தப்படுகின்றது.

**பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு, பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலைபெறச்செய்யப்படுவதானது நடுத்தர காலத்தில் பணவீக்கம் நடு ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதிநிலைப்படுவதற்குத் துணைபுரியும்**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2023 யூனில் 12.0 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்தமையானது சாதகமான தளத் தாக்கத்துடன் இணைந்து வலு மற்றும் உணவு விலைகள் உள்ளடங்கலாக பல வகைகளில் தளர்வடைகின்ற விலை அழுத்தங்களைப் பிரதிபலித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) மற்றும் அடிப்படையான பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) என்பன 2023 யூனில் ஒற்றை இலக்க மட்டங்களிற்கு மிதமடைந்தமையானது பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையினை வலுப்படுத்துகின்றது. 2023இன் இதுவரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் உயர்வடைதலின் முழுமையான ஊடுகடத்தல் விலை மட்டங்களில் இன்னும் பிரதிபலிக்கப்படவில்லையென்பதானது பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைக்கு மேலும் ஆதரவளிக்கக்கூடிய

காரணியொன்றாகலாம். மத்திய வங்கியின் அண்மைய எறிவுகளின் பிரகாரம், முதன்மைப் பணவீக்கமானது மேலும் குறைவடைந்து 2023இன் மூன்றாம் காலாண்டின் முற்பகுதியில் ஒற்றை இலக்க மட்டங்களை அண்மித்து நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டங்கள் அளவில் உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகளின் காலங்கடந்த தாக்கம், வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்பார்க்கப்படுகின்ற மென்மையாக்கம் மற்றும் அவற்றின் கசிவுத் தாக்கங்கள் மற்றும் புள்ளிவிபரத் தளத் தாக்கத்தின் சாதகமான தாக்கத்துடன் இணைந்து செலாவணி வீத உயர்வடைதலின் காரணமாக பொருட்கள் மற்றும் பணிகளின் சாத்தியமான மீள்விலையிடல் என்பவற்றினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை ஆதரவளிக்கப்படுகின்றது. மேலும், பணவீக்க எதிர்பார்க்கைகள் உறுதிநிலைப்படுத்தப்படுவதானது நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தளர்த்துவதற்கான இடைவெளியினை வழங்குகின்றது.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**

**கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, சதவீதம்)**




*குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான உண்மையான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்*

*வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. விசேடமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2023 யூலை எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்களை எறிவு பிரதிபலிக்கின்றது. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி அலுவலர் மட்ட அறிக்கையுடன் இசைந்து செல்லும் விதமாக எதிர்பார்க்கப்படுகின்ற இறைப் பாதை, ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற தற்போதைய எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீத பாதை மற்றும் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் மற்றும் நடுத்தர கால இறை இலக்குகளின் அடைவு என்பன மீதான

நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ் ஊகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் இவ் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து உண்மையான பணவீக்கம் விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில், தற்போதைய எறிவுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். குறிப்பாக, நிரம்பல் நிலைமைகளின் விரைவான இயல்புநிலையினை அடைதல், உலகளாவிய பண்ட விலைகளின் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க சாத்தியமான தன்மையிலான விரைவான தளர்வடைதல் மற்றும் உள்நாட்டு விலைகளிற்கான அவற்றின் ஊடுகடத்தல் போன்றவற்றிலிருந்து எழுகின்ற அடிப்படை எறிவுகளுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. இருப்பினும், நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சியுடன் தோன்றக்கூடிய உள்ளார்ந்த கேள்வி அழுத்தங்கள் போன்ற மேல்நோக்கிய இடர்நேர்வுகள், எரிபொருள் மற்றும் வலு விலைத் திருத்தங்களின் நன்மைகளை நுகர்வோரிற்கு ஊடுகடத்துவதில் தாமதங்கள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளின் எதிர்பார்க்கப்படுகின்ற தள்வடைதலுடன் இணைந்து செலாவணி வீதத்தின் ஏதேனும் தேய்வடைதல் அழுத்தம் என்பன எறிவுகள் மீதான மேல்நோக்கிய அழுத்தங்களை தோற்றுவிக்கக்கூடும்.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமான அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி விபரமறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது.

**உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையானது 2023இன் பிற்பகுதியில் படிப்படியாக மீட்சியடைந்து அம்மீட்சியினை நீடித்து நிலைபெறச்செய்வதன் மூலம் நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சியின் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்தினை அடைவதற்குத் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளில் ஏற்பட்ட கணிசமானளவிலான சுருக்கமொன்றினால் உந்தப்பட்டு உண்மைப் பொருளாதாரமானது 2023இன் முதலாம் காலாண்டில் சுருக்கமடைந்தது. முன்கூட்டிய குறிகாட்டிகளிற்கமைய, பொருளாதார நடவடிக்கையானது 2023இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தும் மெதுவடைந்தது. இது பாரியளவிலான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைக் கொண்டுவரும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகளுடன் இணைந்து 2022இல் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் நீடித்த தாக்கத்தியையும் பிரதிபலித்தது. இருப்பினும், நாணய நிலைமைகளைத் தளர்த்துவதனால் உந்தப்பட்ட கொள்கை இயல்புநிலைக்குத் திரும்புதல், வலுவடைந்த வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினால் ஆதரவளிக்கப்பட்ட நிரம்பல் நிலைமைகளில் மேம்பாடுகள், இறக்குமதி கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்த்தல், வியாபார மற்றும் முதலீட்டாளர் மனோபாவங்களில் மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கொள்கை வழிமுறைகள் மற்றும் கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களின் தாக்கம் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு 2023இன் பிற்பகுதியில் பொருளாதாரமானது படிப்படியாக மீட்சியடையுமென எறிவுசெய்யப்படுகிறது. இம்மீட்சியானது நிலைபேறானதாக அமைவதுடன் இதன்மூலம் பொருளாதாரத்தில் நிலவுகின்ற பாரியளவிலான எதிர்மறையான வெளியீட்டு இடைவெளியினை மூடுவதற்கும் நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சியின் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்தினை அடைவதற்கும் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கின்ற தன்மையானது தொடர்ந்தும் மேம்பட்டு, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் மீட்சிக்கு ஆதரவளிக்கின்றது**

வணிகப்பொருள் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்களவிலானதொரு குறைவுடன் 2023 மே இறுதியில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்த போதிலும் வணிகப்பொருள் இறக்குமதிகளில் காணப்பட்ட சில பின்னடைவுகள் உலகளாவிய கேள்வியில் மிதமடைதலினைப் பிரதிபலித்தது. அதிகரித்தளவிலான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களினால் ஆதரவளிக்கப்பட்டு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகள் அண்மைய மாதங்களில் தொடர்ந்தும் மேம்பட்டுக் காணப்பட்டன. சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் 2022இன்

தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2023இன் முதலாம் அரையாண்டில் கணிசமானளவு அதிகரித்திருப்பதாக எதிர்பார்க்கப்படுவதுடன் இவ்வுத்வேகமானது முன்னோக்கிய காலத்தில் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரச பிணையங்கள் சந்தையின் தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. வரவுசெலவுத் திட்ட ஆதரவிற்காக பல்புடை முகவராண்மைகளிடமிருந்தான நிதியங்களை அரசாங்கம் பெற்றுக்கொண்டதுடன் ஆண்டின் எஞ்சிய பகுதியில் மேலும் உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்கள் மற்றும் சந்தை மனோபாவங்கள் என்பவற்றுடன் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக ஏறத்தாழ 19 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மேலும், உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து கணிசமான தொகையிலான வெளிநாட்டுச் செலாவணியினை மத்திய வங்கி திரட்டக்கூடியதாகயிருந்தது. அதற்கமைய, சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டமானது 2023 யூன் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 3.5 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. சென்மதி நிலுவை நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகளை பரிசீலனையிற்கொண்டு 2023 யூன் 09 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் 286 இணங்குவிப்பு முறைமைக் குறியீடுகளுடன் தொடர்புடைய இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியதுடன் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான கட்டுப்பாடுகளில் மேலும் தளர்வுகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதாரத்திற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் பின்னணியில் இறக்குமதி கட்டுப்பாடுகளின் இத்தளர்வானது செலாவணி வீதத்தின் மீது பாரியளவிலான தேய்மான அழுத்தங்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படவில்லை.

**சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் கணிசமானளவிலான கீழ்நோக்கிய சீராக்கமொன்று குறுங்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது**

நாணய நிலைமைகளைத் தளர்த்துவதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள், மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சந்தை வழிகாட்டுதலுடன் இணைந்து உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மையின் மேம்பட்ட நிலைமைகள் என்பவற்றிற்கு பதிலிறுத்தும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளன. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டின் அறிவிப்புடன் நிச்சயமற்றதன்மைகளுடன் இணைந்த இடர்நேர்வு மிகையானது பாரியளவில் இல்லாதொழிந்தமையினால் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் கணிசமானளவினால் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைவாக, சந்தை வட்டி வீதங்களில் குறிப்பாக, கீழ்நோக்கிய இறுக்கமான தன்மையிலான சமிக்ஞைகளைக் காண்பிக்கின்ற கடன்வழங்கல் வட்டி வீதங்களில், மேலுமொரு கீழ்நோக்கிய சீராக்கத்தினை மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற மெதுவான கீழ்நோக்கிய சீராக்கமானதற்கு மத்தியில் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை மற்றும் இடர்நேர்வு மிகையின் குறைவு என்பவற்றின் துரிதமான ஊடுகடத்தலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியின் மூலமான நிர்வாக வழிமுறைகளை தேவைப்படுத்தும். பொருளாதாரம் மற்றும் அதன் ஆர்வலர்கள் நாணய நிலைமைகளின் அத்தகைய தளர்வடைதலிலிருந்து நன்மைபெறுவரென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை உள்ளடங்கலாக தனியார் துறைக்கான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான கொடுகடனானது 2023 மேயில் தொடர்ந்தும் சுருக்கமடைந்தது. இருப்பினும், நாணய நிலைமைகளின் தளர்வடைதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சி என்பவற்றுடன் தனியார் துறைக்கான கொடுகடனில் படிப்படியானதொரு திரும்பல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பணவீக்கத்தின் விரைவான மெதுவடைதலினைக் கருத்திற்கொண்டு கொள்கை வட்டி வீதங்கள் மேலும் குறைக்கப்பட்டமையானது பொருளாதாரத்தின் மீளெழுச்சியினை வலுவூட்டுகின்றது**

மேலே குறிப்பிடப்பட்டவாறு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2023 யூலை 05ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 11.00 சதவீதத்திற்கும் 12.00 சதவீதத்திற்கும் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதற்குத் தீர்மானித்தது. கொள்கை வட்டி வீதங்களில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட குறைவானது பணவீக்கத்தின் வேகமான மிதமடைதலிற்கேற்ப சந்தை வட்டி வீதங்களை கீழ்நோக்கிச் சீராக்குவதற்கான உத்வேகத்தினை வழங்குமென்பதுடன் இதன்மூலம் நாணய நிலைமைகள் தொடர்ந்தும் தளர்வாகக் காணப்படும். கொள்கை வட்டி வீதங்களின் இதுவரையிலான குறைப்பினதும் வட்டி வீத இடர்நேர்வு மிகையின் குறைப்பினதும் நன்மைகளை வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்குத் தாமதமின்றி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையானது வழங்க வேண்டுமென சபை எதிர்பார்க்கின்றது. இருப்பினும், அத்தகைய அபிவிருத்திகளின் ஊடுகடத்தலானது போதுமாந்தன்மையற்றதாகவும் மந்தமானதாகவும் கருதப்படும் பட்சத்தில், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் காலந்தவறாத மற்றும் போதியளவிலான ஊடுகடத்தலினை நிச்சயப்படுத்துவதற்குப் பொருத்தமான நிர்வாக வழிமுறைகளை மேற்கொள்வது குறித்து மத்திய வங்கி பரிசீலனையிற்கொள்ளும்.

இதுவரை பின்பற்றப்பட்ட நாணய மற்றும் இறைக் கொள்கைகள் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்குப் பாரியளவில் துணைபுரிந்துள்ளன. பொருளாதாரத்தின் மீளெழுச்சிக்கு ஆதரவளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளிற்குப் பங்களிக்கும் பொருட்டு பொருளாதாரத்தின் சகல ஆர்வலர்களும் கூட்டாகப் பணியாற்ற வேண்டுமென்ற கருத்தினை சபை கொண்டிருந்தது. விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கும் பொருளாதாரமானது நடுத்தர காலத்தில் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதனை ஆதரவளிப்பதற்கும் அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை மீள்வலியுறுத்தும் வேளையில், எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொருளாதாரத்திற்கும் விலை உறுதிப்பாட்டிற்கும் இடர்நேர்வுகள் தோற்றம்பெறும் பட்சத்தில் தேவைக்கேற்ப பொருத்தமான முறையில் செயற்படுவதற்குச் சபை தயாராகவிருக்கும்.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதுடன் நியதி ஒதுக்கு வீதம் மாற்றமடையவில்லை** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 11.00% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 12.00% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 4.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2023 யூலை 06ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றினுடாக நேரலையாக ஒளிபரப்பப்படும்.

நாணயக் கொள்கை மீளாய்வு மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2023 ஓகத்து 24ஆம் நாளன்று வெளியிடப்படும்.

## இணைப்பு I

### அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் (அ) | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 | | | | | 2022 | | | | | 2023 |
| | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு |
| **வேளாண்மை** | 4.3 | 11.6 | -3.3 | -6.8 | **0.9** | -4.4 | -7.9 | -6.7 | 0.7 | **-4.6** | 0.8 |
| **கைத்தொழில்கள்** | 6.6 | 22.6 | -1.8 | 0.1 | **5.7** | -3.7 | -10.1 | -21.3 | -30.1 | **-16.0** | -23.4 |
| **பணிகள்** | 4.3 | 7.5 | -1.5 | 4.4 | **3.5** | 1.8 | -1.8 | -4.2 | -3.9 | **-2.0** | -5.0 |
| **மொ.உ.உற்பத்தி** | **4.5** | **13.8** | **-3.2** | **1.4** | **3.5** | **-0.5** | **-7.4** | **-11.5** | **-12.4** | **-7.8** | **-11.5** |

*(அ) 2023 மாச்சில் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது*

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | ஒத் 22 | நவெ 22 | திசெ 22 | | சன 23 | பெப் 23 | மாச் 23 | ஏப் 23 | மே 23 | யூன் 23 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 66.0 | 61.0 | 57.2 | கொநுவிசு (2021=100) | 51.7 | 50.6 | 50.3 | 35.3 | 25.2 | 12.0 |
| | தேநுவிசு (2013=100) | 70.6 | 65.0 | 59.2 | தேநுவிசு (2021=100) | 53.2 | 53.6 | 49.2 | 33.6 | 22.1 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 49.7 | 49.4 | 47.7 | கொநுவிசு (2021=100) | 45.6 | 43.6 | 39.1 | 27.8 | 20.3 | 9.8 |
| | தேநுவிசு (2013=100) | 62.4 | 60.1 | 57.5 | தேநுவிசு (2021=100) | 52.0 | 50.1 | 44.2 | 31.8 | 21.6 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 03: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செத் 22 | ஒத் 22 | நவெ 22 | திசெ 22 | சன 23 | பெப் 23 | மாச் 23 (அ) | ஏப் 23 (அ) | மே 23 (அ) |
| ஒதுக்குப் பணம் | 1,379 | 1,342 | 1,318 | 1,349 | 1,590 | 1,505 | 1,424 | 1,417 | 1,559 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 12,051 | 12,046 | 12,163 | 12,290 | 12,322 | 12,346 | 12,293 | 12,387 | 12,307 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (1,893) | (1,873) | (1,870) | (1,767) | (1,573) | (1,434) | (1,174) | (1,039) | (838) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 13,944 | 13,919 | 14,033 | 14,056 | 13,895 | 13,780 | 13,467 | 13,426 | 13,144 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 7,043 | 7,178 | 7,293 | 7,471 | 7,612 | 7,471 | 7,568 | 8,091 (ஆ) | 8,111 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 1,703 | 1,778 | 1,760 | 1,747 | 1,748 | 1,712 | 1,593 | 1,130 (ஆ) | 1,067 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,577 | 7,530 | 7,499 | 7,414 | 7,318 | 7,260 | 7,153 | 7,110 | 7,021 |
| விரிந்த பணம் ($M_4$) | 14,540 | 14,547 | 14,676 | 14,840 | 14,891 | 14,906 | 14,868 | 14,981 | - |

(அ) 2023 மாச்சு தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாவின் உயர்வடைதலானது அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் மிதமடைதலிற்கு முக்கியமாகப் பங்களித்தது.

(ஆ) 2023 சனவரி 30 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பெறப்பட்ட அமைச்சரவை ஒப்புதலுடன், அரசிற்குச் சொந்தமான தேர்ந்தெடுக்கப்பட்ட வியாபாரத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகைகளை மீள்கட்டமைப்பதற்குப் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடனானது 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய அரச படுகடனினுள் ஈர்த்துக்கொள்ளப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கத்தின் ஒரு பகுதி 2023 ஏப்பிறலில் நிறைவேற்றப்பட்டதுடன் அரசிற்குச் சொந்தமான குறித்த வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் இது பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இது அரச கூட்டுத்தாபனங்கள்/ அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கான கொடுகடனில் குறைப்பொன்றினையும் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் விரிவாக்கமொன்றினையும் தோற்றுவித்தது.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | சன 23 முடிவில் | பெப் 23 முடிவில் | மாச் 23 முடிவில் | ஏப் 23 முடிவில் | மே 23 முடிவில் | யூன் 23 முடிவில் | 05 யூலை 2023இல் உள்ளவாறாக |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 14.50 | 14.50 | 15.50 | 15.50 | 15.50 | 13.00 | 13.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 15.50 | 15.50 | 16.50 | 16.50 | 16.50 | 14.00 | 14.00 |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்** | 15.26 | 15.27 | 16.49 | 16.50 | 16.50 | 13.85 | 13.85 |
| **திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 29.91 | 29.72 | 25.99 | 25.74 | 25.65 | 23.00 | 17.79 |
| 182-நாள் | 28.72 | 28.67 | 25.79 | 25.27 | 25.29 | 19.49 | 15.93 |
| 364-நாள் | 27.78 | 27.67 | 24.31 | 23.00 | 22.91 | 16.99 | 13.86 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 24.82 | 23.45 | 21.40 | 21.03 | 20.29 | 19.47 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 18.66 | 18.50 | 18.29 | 17.87 | 17.75 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 25.82 | 25.31 | 23.70 | 23.09 | 22.39 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 14.63 | 14.74 | 15.06 | 15.12 | 15.23 | 15.09 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 19.15 | 19.23 | 19.80 | 19.72 | 19.84 | 19.70 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 22.24 | 21.56 | 20.48 | 19.19 | 18.85 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 22.78 | 22.06 | 21.07 | 19.70 | 19.19 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*